# பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரி (கருதப்பட்ட பங்கிலாப வரி) (Tax on distributable Profits/Deemed dividend tax)

## செலுத்துவதற்கான பொறுப்பு (பிரிவு 61 (1)(b)(ii))

கடந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து 18 மாதங்கள் கடந்தும் கம்பனியொன்று தனது கடந்த ஆண்டின் இலாபத்தில் குறைந்தது 10% ஆயினும் பகிரவில்லையாயின் அக்கம்பனி, முன்னைய ஆண்டின் பகிரத்தக்க இலாபத்திலிருந்து பகிர்ந்த மொத்த பங்கிலாபங்களின் கூட்டுத்தொகையிலும் மேலதிகமாக உள்ள முன்னைய ஆண்டின் பகிரத்தக்க இலாபத்தில் 33 1/3% க்கு 15% வரி செலுத்த பொறுப்புடையது.

எனினும் ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களுக்கு இசைவாக அக்கம்பனி தனது பங்கிலாபத்தை முழுமையாகவோ பகுதியளவிலோ பகிராமல் வைத்திருந்தாலோ ஒதுக்கி வைத்திருந்தாலோ அப்பகுதியளவிலோ முழுமையாகவோ பகிராமல் வைத்திருந்த அல்லது ஒதுக்கிய பங்கிலாபம் பகிரப்படும் பங்கிலாபத்தை கணிக்கும் நோக்கில் பகிரப்பட்டதாகவே கருதப்படும். இவ்வாறு கருதுவதற்கு இது தொடர்பில் ஆணையாளர் நாயகம் திருப்தியடைதல் வேண்டும்.

## பகிரத்தக்க இலாப கணிப்பீடு

ஏதேனும் கம்பனி தொடர்பில் ஏதேனும் வரி மதியாண்டில் ‘‘பகிரத்தக்க இலாபம்’’ என்பது அதன் அவ் வரிமதியாண்டிற்கான ஏட்டு இலாபத்தில் (Book Profit) கீழ்வரும் **செம்மையாக்களின் பின்** வரும் தொகையை குறிக்கும்

**<u>ஏட்டு இலாபத்திலிருந்து கீழ்வருவனவற்றை கழிக்க வேண்டும்</u>**

(a) குறித்த வருமதியாண்டிற்கான செலுத்தவேண்டிய வருமான வரி

(b) காணியை அல்லது ஏதேனும் மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு குறித்த வருமதியாண்டில் ஏற்பட்ட கிரயம்

(c) ஏட்டி இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களின் மீள் மதிப்பின் மூலம் உருவாக்கப்பட்ட ஏட்டளவு இலாபங்கள் (Notional Profits)

**<u>ஏட்டு இலாபத்துடன் கீழ்வருவனவற்றை கூட்டல் வேண்டும்</u>**

(a) ஏட்டு இலாபத்திலிருந்து கழிக்கப்பட்ட குறித்த வருமதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்கள் மீதான பெறுமானதேய்வுப்படி

(b) ஏட்டி இலாபத்திலிருந்து கழிக்கப்பட்ட சொத்துக்களின் மீள் மதிப்பின் மூலம் ஏற்பட்ட ஏட்டளவு நட்டங்கள் (Notional Loss)

பகிரத்தக்க இலாபக்கணிப்பீடு கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| கடந்த வரிமதியாண்டிற்கான வரிக்கு முன் இலாபம் (உதாரணம் 2015/16) | | xxxxxxxx |
| **கழிவு:** | | |
| கடந்த வரிமதியாண்டிற்கான செலுத்த வேண்டிய வருமான வரி (61 (1) (a) இன் படி கணிக்கப்பட்டது) | xxxxx | |
| ஏட்டு இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதன சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு இலாபம் | xxxx | |
| கடந்த வரிமதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்கள் | xxxxx | (xxxxxx) |
| | | **xxxxxx** |
| **கூட்டு:** | | |
| கடந்த வரிமதியாண்டில் மூலதனச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு | xxxxxx | |
| ஏட்டு இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதன சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் நட்டம் | xxxxxx | xxxxxx |
| **2015/ 2016 வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபம்** | | **xxxxxx** |

**உதாரணம் 01**

பின்வரும் தகவல்கள் ABC கம்பனி தொடர்பில் 2015/16 ஆம் வரிமதியாண்டுக்குரியன

| | |
|---|---|
| வரிக்குமுன் இலாபம் | 45,765,000 |
| 2015/16 வரிமதியாண்டிற்கான வருமான வரி | 4,670,000 |

குறித்த ஆண்டில் ரூ.12,000,000/- பெறுமதியாண்டின் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் அச்சொத்துக்களுக்கு ரூ. 1,250,000/- பெறுமானத்தேய்வு இடப்பட்டது.

2015/16 வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபத்தை கணிக்க.

**<u>பரிந்துரைக்கப்பட்ட விடை</u>**

| | | |
|---|---|---|
| 2015/ 2016 வரிமதியாண்டிற்கான வரிக்கு முன் இலாபம் | | 45,765,000 |
| **கழி:** | | |
| 2015/16 வரிமதியாண்டிற்கான செலுத்த வேண்டிய வருமான வரி | 4,670,000 | |
| மூலதன சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு இலாபம் | - | |
| 2015/16 வரிமதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்கள் | 12,000,000 | (16,670,000) |
| | | **29,095,000** |
| **கூட்டு:** | | |
| மூலதனச் சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு | 1,250,000 | |
| மூலதன சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் நட்டம் | - | 1,250,000 |
| **2015/ 2016 வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபம்** | | **30,345,000** |

## பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியைத் தவிர்ப்பதற்கு செலுத்தவேண்டிய இழிவுமட்ட பங்கிலாபம்

ஓர் நிறுவனத்தின் வரிமதியாண்டு தொடக்கத்திலிருந்து 18 மாதங்களுள் குறைந்தது பகிரப்பட்ட இலாபத்தில் 10% பங்கிலாபமாக பகிரப்பட வேண்டும்.

ஆதலால் 30 செப்டம்பர் முடிவடையும் வரிமதியாண்டிற்கு 01 ஏப்ரலில் பகரப்பட்ட (declared) பங்கிலாபம் கருத்தில் கொள்ளப்படும்.

(உதாரணம் : 2015/16 ஆம் வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபம் 01.04.2015 தொடக்கம் 30.09.2016 வரையில் பகிரப்படலாம்.)

## பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரிக்கணிப்பு

**பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரி =[(பகிரத்தக்க இலாபம் x 33 1/3 %) – பகிரப்பட்ட பங்கிலாபம்] x 15%**

| | |
|---|---|
| 2015/ 2016 வரிமதியாண்டில் பகிரப்பட்ட இலாபத்தில் 33 1/3% பங்கு | xxxxx |
| கழி: | |
| 2015/ 2016 வரிமதியாண்டு தொடக்கத்திலிருந்து 18 மாதங்களுள் பகிரப்பட்ட பங்கிலாபம் (உதாரணம் 01.04.2015 தொடக்கம் 30.09.2016) | (xxx) |
| | xxxxx |
| **2016/17 க்கான பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரி (15% இல்)** | **xxx** |

**உதாரணம் 02**

உதாரணம் ஒன்றை அடிப்படையாக கொண்டு 2016/17 வரிமதியாண்டில் பகிரத்தக்க மீதான வரியை தவிர்ப்பதற்கு செலுத்தவேண்டிய இழிவுமட்ட பங்கிலாபத்தை கணிக்க.

**பரிந்துரைக்கப்பட்ட விடை**

| | |
|---|---|
| 2015/16 இல் பகிரத்தக்க இலாபம் | 30,345,000 |
| 10% வரியை தவிர்க்க இழிவுமட்ட பங்கிலாபம் | 30,345,000 x 10% |
| **2016/17** ஆம் வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரி | **3,045,000** |

**பரிந்துரைக்கப்பட்ட விடை**

உதாரணம் 01 இன் தகவல்களை அடிப்படையாக கொண்டு, ABC கம்பனி 2015/16 வரிமதியாண்டிற்கு எவ்வித பங்கிலாபங்களையும் 2015/16 ஆம் வரிமதியாண்டின் இலாபத்தைக் கொண்டு பகர வில்லையெனின்,

2016/17 வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியைக் கணிக்க.

**பரிந்துரைக்கப்பட்ட விடை**

| | |
|---|---|
| 2015/16 இற்கான பகிரத்தக்க இலாபம் | 30,345,000 |
| 2015/ 2016 வரிமதியாண்டில் பகிரத்தக்க இலாபத்தில் 33 1/3% | 10,115,000 |
| கழி: | |
| 2015/ 16 ஆம் வரிமதியாண்டு தொடக்கத்திலிருந்து 18 மாதங்களுள் பகிரப்பட்ட பங்கிலாபம் | - |
| | 10,115,000 |
| **2016/17 விரமதியாண்டில் பகிரத்தக்க இலாபத்தின் மீதான 15% வரி** | **1,517,250** |

## பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரிக்கொடுப்பனவிற்கான கெடு (Due Date)

ஒவ்வொரு வரிமதியாண்டிலும் ஒக்டோபர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தப்படல் வேண்டும்.
உதாரணம். 2016/17 வரிமதியாண்டிற்கான பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரி அவ்வாண்டின் ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன் (30.10.2016) செலுத்தப்படல் வேண்டும்.

**உதாரணம் 04**

பின்வரும் தகவல்கள் 2015/2016 வரிமதியாண்டிற்கான வதியும் கம்பனி ஒன்று தொடர்புடையன.

| | ரூபா. |
|---|---|
| வரிக்கு முன் கணக்கீட்டு இலாபம் | 9,300,000 |
| வரி விதி வருமானத்தின் மீதான வரி | 1,116,000 |
| இலாபத்தில் கழிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு | 1,245,000 |
| நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களின் கிரயம் | 3,000,000 |
| நடப்பாண்டில் சேர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | 360,000 |
| 15.11.2015 இல் பகிரப்பட்ட இடைக்கால பங்கிலாபம் | 300,000 |

பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியை தவிர்ப்பதற்கு பகிரவேண்டிய இழிவு மட்ட பங்கிலாபத்தைக் கணிக்க.

பகிரத்தக்க இலாபத்தில் செலுத்த வேண்டிய வரியைக் கணிக்க.

**பரிந்துரைக்கப்பட்ட விடை**

| | | |
|---|---|---|
| வரிக்கு முன்னான கணக்கீட்டு இலாபம் | | 9,300,000 |
| கழி: | | |
| வரி விதி வருமான மீதான வரி | 1,116,000 | |
| நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களின் கிரயம் | 3,000,000 | 4,116,000 |
| | | 5,184,000 |
| கூட்டு: | | |
| நடப்பாண்டில் சேர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | | 360,000 |
| **பகிரத்தக்க இலாபம்** | | **5,544,000** |

**இழிவு மட்ட பகிர்வு (பகிரத்தக்க இலாபத்தில் 10% ) 554,400**

பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியைத் தவிர்ப்பதற்கு (5,544,000 இன்10%) தேவையான இழிவு மட்டப் பகிர்வு ரூபா. 554,400 ஆகும். ரூபா 300,000 பங்கிலாபாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே கம்பனி பகிரத்தக்க இலாபத்தில் வரிசெலுத்தும் பொறுப்புடையது. அப்பொறுப்பு பின்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| பகிரத்தக்க இலாபத்தின் 33 1/3% ( 5,544,000 x 33 1/3%) | 1,848,000 |
| கழி: 30.09.2016 முன் பகிரப்பட்ட பங்கிலாபம் | (300,000) |
| | 1,548,000 |
| **பகிரத்தக்க இலாபத்தில் செலுத்த வேண்டிய 15% வரி** | **232,200** |

**உதாரணம் 05**

ரன்மின் நிறுவனத்தின் பின்வரும் தகவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- 31 மார்ச் 2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குமுன் இலாபம் ரூபா.14,250,000/- ஆகும்.

- 2015/16 ஆம் வரிமதியாண்டிற்கான வரிநோக்கிலான செம்மையாக்கப்பட்ட இலாபமும் வரி பொறுப்பும் முறையே ரூபா. 17,088,750/- மற்றும் ரூபா. 4,750,000/- ஆகும்.

SRI LANKA

- 2015/16 ஆம் வரிமதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பிலான விபரங்கள் கீழ்வருமாறு:

| சொத்துக்கள் | கிரயம் | ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு |
|---|---|---|
| காணி | 1,500,000 | 0 |
| மகிழூர்ந்து | 2,200,000 | 286,000 |
| பணிமனை உபகரணம் | 342,000 | 32,200 |
| தளபாடம் | 84,000 | 12,600 |
| | **4,126,000** | **330,800** |

- 2015/16 ஆம் வரிமதியாண்டில் கம்பனி கீழ்வரும் பங்கிலாபங்களை பகிர்ந்தது.
    - 30 ஜனவரி 2016 இல் இடைக்கால பங்கிலாபமாக ரூபா.250,000.
    - 15 நவம்பர் 2016 இல் இறுதி பங்கிலாபமாக ரூபா. 500,000.

**மேற்கானும் தகவல்களை கொண்டு கீழ்வருவனவற்றை கணிக்க.**
**(a) 2015/16 ஆம் வரிமதியாண்டிற்கான கம்பனியின் பகிரத்தக்க இலாபம்.**
**(b) பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியை தவிர்ப்பதற்கு பகர வேண்டிய இழிவு மட்ட பங்கிலாபம்.**
**(c) 2016/17 ஆம் வரியாண்டில் பகிரத்தக்க இலாபத்தின் மீது செலுத்தவேண்டிய ஏதேனும் வரி.**

**பரிந்துரைக்கப்பட்ட விடை**

| | | |
|---|---|---|
| வரிக்கு முன் கணக்கீட்டு இலாபம் | | 14,250,000 |
| கழி: | | |
| வரி விதி இலாபத்தின் மீதான வரி | 4,750,000 | |
| நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களின் கிரயம் (குறிப்பு) | 4,126,000 | 8,876,000 |
| | | 5,374,000 |
| கூட்டு: | | |
| நடப்பாண்டில் சேர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | | 330,800 |
| **பகிரத்தக்க இலாபம்** | | **5,704,800** |
| **இழிவு மட்ட பகிர்வு (பகிரத்தக்க இலாபத்தில் 10%)** | | **570,480** |

**குறிப்பு : மூலதனச் சொத்துக்களின் கிரயம் வரையறைகளின்றி கழிக்கப்படக் கூடியன.**

பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியைத் தவிர்ப்பதற்கு (5,704,800 இன்10%) தேவையான இழிவு மட்டப் பகிர்வு ரூபா. 570,480 ஆகும். ரூபா 250,000 பங்கிலாபாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே கம்பனி பகிரத்தக்க இலாபத்தில் வரிசெலுத்தும் பொறுப்புடையது. அப்பொறுப்பு பின்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| பகிரத்தக்க இலாபத்தின் 33 1/3% (5,704,800 x 3 1/3%) | 1,901,600 |
| கழி: 30.09.2016 முன் பகிரப்பட்ட பங்கிலாபம் | (250,000) |
| | 1,651,600 |
| **பகிரத்தக்க இலாபத்தில் செலுத்த வேண்டிய 15% வரி** | **247,740** |

**உதாரணம் 06**

பன்டா விளையாட்டுப் பொருள் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:

- 31 மார்ச் 2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன் இலாபம் ரூபா. 21,750,000/- ஆகும்.

- 2015/16 ஆம் வரிமதியாண்டிற்கான வரிநோக்கிலான செம்மையாக்கப்பட்ட இலாபமும் வரி பொறுப்பும் முறையே ரூபா. 37,600,000/- மற்றும் ரூபா. 6,325,000/- ஆகும்.

- நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களின் கிரயம் ரூபா. 3,256,000 ஆகும். மேலும் அச்சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு ரூபா். 376,700 ஆகும்.

- பணிப்பாளர் சபையின் தீர்மானித்திற்கிணங்க கம்பனி 30 மே 2016 இல் ரூபா. 1,500,000 ஐ கீழ்வருமாறு பங்கிலாபமாக செலுத்தியது.
  - 2014/15 ஆம் வரிமதியாண்டின் இலாபத்திலிருந்து ரூபா. 500,000.
  - 2015/16 ஆம் வரிமதியாண்டின் இலாபத்திலிருந்து ரூபா. 800,000.
  - 2016/17 ஆம் வரிமதியாண்டின் இலாபத்திலிருந்து ரூபா. 200,000.

**மேற்கானும் தகவல்களை கொண்டு கீழ்வருவனவற்றை கணிக்க.**
**(a) 2015/16 ஆம் வரிமதியாண்டிற்கான கம்பனியின் பகிரத்தக்க இலாபம்.**
**(b) பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியை தவிர்ப்பதற்கு பகர வேண்டிய இழிவு மட்ட பங்கிலாபம்.**
**(c) 2016/17 ஆம் வரியாண்டில் பகிரத்தக்க இலாபத்தின் மீது செலுத்தவேண்டிய ஏதேனும் வரி.**

**<u>பரிந்துரைக்கப்பட்ட விடை</u>**

| | | |
|---|---|---|
| வரிக்கு முன் கணக்கீட்டு இலாபம் | | 21,750,000 |
| கழி: | | |
| வரி விதி இலாபத்தின் மீதான வரி | 6,325,000 | |
| நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களின் கிரயம் | 3,256,000 | (9,581,000) |
| | | 12,169,000 |
| கூட்டு: | | |
| நடப்பாண்டில் சேர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | | 376,700 |
| **பகிரத்தக்க இலாபம்** | | **12,545,700** |

**இழிவு மட்ட பகிர்வு (பகிரத்தக்க இலாபத்தில் 10%) 1,254,570**

பகிரத்தக்க இலாபத்தின் மீதான வரியைத் தவிர்ப்பதற்கு (12,545,700 இன் 10%) தேவையான இழிவு மட்டப்பகிர்வு ரூபா. 1,254,570 ஆகும். எனினும் 2015/ 2016 ஆம் வரிமதியாண்டிற்கான இலாபத்திலிருந்து 30 செப்படம்பர் 2016 இல் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ரூபா. 800,000 எனவே கம்பனியில் பகிரத்தக்கத்தின் மீதான இலாபப்பொறுப்பு கீழ்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| பகிரத்தக்க இலாபத்தின் 33 1/3% (12,545,700 x 3 1/3%) | 4,181,900 |
| கழி: 30.09.2016 முன் பகிரப்பட்ட பங்கிலாபம் | <u>(800,000)</u> |
| | 3,381,900 |
| **பகிரத்தக்க இலாபத்தில் செலுத்த வேண்டிய 15% வரி** | **507,285** |